8-MAY

மாதர் போதினி

No. 256 மே 1919 No. 5

INTERCESSION

பரிந்து பேசுதல்

நான் ஒரு ஜெபமனுஷனுயிருக்க வேண்டுமென்பதே என் மேலான விருப்பம். ஜெபத்தைப்போல் வல்லமையுள்ளது வேறொன் றில்லை. ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்போமாக.

நீ ஒன்று செய்யப் படிக்கவேண்டும். நீ எதைச் செய்யாமல் விட்டாலும் இதை விடாதே. நீ இதைக் கவனியாவிடில், உன்வேலை மட்டுப்பட்டு அரைகுறையாகிவிடும். நீ தனித்திருக்கும்படி பிரயாசப்பட்டு தனித்து ஜெபி. இது அதிக முக்கியமான காரியம். நீ நன்ருய்ப் பேசி மற்றவர்களைக் கவரக்கூடியவளாய் ஜீவிக்கலாம். ஆனல் உன் ஜீவியம் உண்மையாய்ப் பிறருக்குப் பிரயோஜனப்படவேண்டுமானல் நித்திய உலகத்தோடு உனக்கு ஐக்கியம் அவசியமானது.

தனித்திருப்பது, தேவனோடு தனித்து அவரும் நீயும் மாத்திரம் ஓரிடத்திலிருப்பதுதான் நீ இந்த உலகில் செய்கிற எல்லாக் காரியங்களிலும் மேன்மையான உத்தம காரியம். நீ ஒருவேளை அவரைப் பற்றி ஓயாமல் பேசலாம், மற்றவர்களுக்கு அவரைப்பற்றிப் பேசுகையில் உற்சாகத்தால் மகிழலாம். என்ருலும் நீ அவரைத் தனித்து சந்திக்கக்கூடாதவளாயிருக்கக்கூடும். இது உன் அனுபோகமா? ஆழ்ந்தநிலையான உண்மையுள்ள வைராக்கியமுள்ளவளாய்ப் பிரயோஜனமுள்ள ஆண்டவருடைய கருவியாயிருக்கவேண்டுமாகில் நீ அவரோடு தனித்திருந்து அவரை அறியவேண்டும்.

நீ அறிவினல் ஜெபிக்கிருயோ அன்பினல் ஏவப்பட்டு ஜெபிக்கிருயோ சிந்தித்துப்பார்.

உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஒரு ஆத்துமாவுக்காக ஒரு மணிநேரம் ஜெபிப்பாயானல் அந்த ஆத்துமாவை நேசிக்கத் துவக்குவாய் என்பது நிச்சயம். ஒருநாளை ஜெபத்திற்காகப் பிரத்தியேகப் படுத்தி உன்னை அடக்கி ஜெபத்தில் செலவிட்டால் உத்தமமாயிருக்

கும். நீ உன் ஜீவியமுழுவதிலுஞ் செய்த வேலையில் இதுவே சிறந்த வேலையென்று காண்பாய்.

நான் தனித்திருந்து முற்றும் அமர்ந்திருக்கையில் நான் ஒன்றையும் பற்றி நினையாமல் கவனித்திருக்கிறபோது ஒருவர் என்னண்டை வந்து தமது சொந்த ஜீவனை எனக்குள் பாயச்செய்கிறார் என்று கண்டறிந்திருக்கிறேன்.

நாம் துதிசெலுத்தவேண்டிய விஷயங்களாவன:

யுத்தம் ஓய்ந்து, உலகத்திற்கும் நமது தேசத்திற்கும் சமாதானம் பிறந்திருப்பதற்காகவும்,

கடந்த நாலுவருஷங்களாய் மிகப் பணக்குறைவும் ஆட்குறைவும், நேரிட்டபோதிலும், இத்தேசத்தில் சுவிசேஷ வேலை விருத்தியாகி வந்திருக்கிறதற்காகவும்,

மார்க்க அசைவு அதிகமாயிருக்கும் பாகங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் சபையில் நூதனமாய்ச் சேர்ந்திருப்பதற்காகவும்,

இந்திய சபையில் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை அதிகரித்துவருவதற்காகவும், மிஷனெரி சம்பந்தமான பற்பல ஏற்பாடுகளில் ஒற்றுமையும் ஐக்கியமும் பெருகி வருவதற்காகவும் துதிப்போமாக.

ஜெபிக்கவேண்டிய விஷயங்களாவன:

தற்சமயம் ராஜாங்க ஆளுகை முறையில் ஆலோசிக்கப்படும் சீர்திருத்தங்கள் சகல ஞானத்தோடும் நடத்தப்படவும்,

இவ்வித மாறுதல்கள் யாவும் தேவனுடைய ராஜ்யம் பிரபல்யமாவதற்கு அநுகூலமாயிருக்கவும்,

மார்க்க விஷயத்திலும், ஜனசமுதாய விஷயத்திலும் தேசத்தைச் சீர்திருத்தி, ஊன்றக் கட்டுவதற்கு சுதேச சபையானது ஏற்ற சாதனமாய் விளங்கவும்,

இத்தேசத்தில் சுவிசேஷத்தைப் பிரபல்யப்படுத்தும் உத்தரவாதம் தங்களைப் பொறுத்ததென்று இந்திய கிறிஸ்தவர்கள் அதிகமாய் உணரவும், சுயாதீன சுவிசேஷ பிரபல்ய முயற்சிகளும் சுதேச மிஷனெரி ஏற்பாடுகளும் அதிகமாய் பெலனடைந்து தழைத்தோங்கவும்,

கற்றோரான வாலிபர் திருச்சபை ஊழியத்திற்கென்றும் தேச நல்வாழ்வுக்கென்றும் தங்களை அதிகமதிகமாய்ப் பிரதிஷ்டை பண்ணவும்,

மிஷனெரி சங்கங்களும், வாலிப புருஷர் ஸ்திரீகளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய சங்கங்களும் செய்யும் வேலை அபிவிருத்தியடைந்து ஆசீர்வாதம் பெறவும்,

யுத்தத்தினால் மிஷனெரிமாரின் தொகை குறை[illegible]ந்திருக்கும் நாளு வித மிஷன் ஸ்தானங்களில் அறுப்புக்கு எஜமான் தமது [illegible] அறுப்புக்கு வேலையாட்களை யனுப்பவும்,

சுவிசேஷத்திற்கு நற்சமயமாகத் தோன்றும் இக்காலங்களில் இந்து தேசக் கிறிஸ்துசபை விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் உழைக்கவும்,

பெரிய மாறுதலும் சீர்திருத்தலும் நடக்கப்போகும் இக்காலத்தில் தனிஜீவியத்திலும், ஜாதிகளின் ஆலோசனைகளிலும், கர்த்தர் மகிமைப் படவும், தம்முடைய ராஜ்யத்தை தீவிரமாய் வருவிக்கவும் ஜெபம் பண்ணுவோமாக.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக; ஆமென். எபே. 3 : 20, 21.

THE IDEALS OF A TEACHER

உபாத்தினி தொடரவேண்டிய லக்குகள்

I. தனக்குரிய லக்குகள் (Ideals for Herself)

1. **மேய்ப்பன்.**

உபாத்தினி தன் மாணாக்கரை நேசிக்கவேண்டும். நல்ல மேய்ப்பன் கறவலாடுகளை மெதுவாய் நடத்தி அவைகளை அன்பாய் அனுதாபத்தோடும் பொறுமையோடும் நடத்தினதுபோல் ஏசா. 40 : 11. உபாத்தினியும் பிள்ளைகளைப் பட்சமாய் நடத்தவேண்டும். மாணாக்கருடைய அன்பையும் அவர்கள் அன்பினால் செய்யும் ஊழியத்தையும் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு தம்மால் செய்யக்கூடிய நன்மைகளையெல்லாம் செய்யாவிட்டால் நெய்யைச் சாப்பிட்டு ஆட்டுமயிரை உடுத்து, மந்தையையோ மேய்க்காமல் பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்ட இஸ்ரவேலின் ஆசாரியருக்கு ஒப்பாயிருப்போம். எசேக். 34 : 4–16, சகரி. 11 : 16. இயேசு பேதுருவுக்குக் கொடுத்த கட்டளையை நமக்கும் கொடுக்கிறார். 'என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக'? என்பதே யோ. 21 : 15. ஆகையினால் நாம் செய்யவேண்டியது என்ன' நமது கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆட்டுக்குட்டிகளின் நன்மையை எல்லாவற்றிலும் மேலாகக் கருதவேண்டும். அவர்களுக்கு எவ்விதத்திலும் இடறுதற்

கான கல்லாய் இருக்கலாகாது. உதாரணமாக, பிள்ளைகளைப் பேச வேண்டுமென்று சொல்லி, பேசினவர்களைத் தண்டித்து பின் உபாத்திமாரே பேசிக்கொண்டிருந்தால் பிள்ளைகளுக்கு இடறலாயிருக்கிறதல்லவா? பேச நமக்கு அதிகாரமுண்டு. பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதுகிறபடி, 1 கொரி. 10: 23. எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு அதிகாரமுண்டு. ஆனால் எல்லாம் தகுதியாயிராது. ஆகையினால் நமக்கு இஷ்டமானதை நடப்பித்து சிறுவருக்கு இடறலுண்டாக்குவதைப்பார்க்கிலும் நம்மைக் கொஞ்சம் வெறுத்து சிறுவருக்கு விலக்கப்பட்ட காரியத்தை நாமும் செய்யாமலிருப்பது நலம். அவர்களிடமிருந்து நன்மை நாம் பெற்றுக்கொள்வதைப்பார்க்கிலும் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய நன்மையையே மேலாகத் தேடவேண்டும். 2 கொரி. 12: 14. நான் உங்களுடையதை அல்ல, உங்களையே தேடுகிறேன்.

2. பிள்ளை வளர்க்கும் தாய் (Nurse) 1 தெச. 2 : 7, பிலிப். 4: 1.

3. தகப்பன்.

தகப்பனானவன் பிள்ளையை பட்சத்தோடும் கண்டனையோடும் நடத்துவதுபோல உபாத்தினி ஒவ்வொரு பிள்ளைமேலும் கவலையெடுத்து, நன்றாய்ச் செய்கிறவர்களைத் தட்டிக்கொடுத்து இளக்கரித்துப்போகிறவர்களைத் தூக்கியெடுத்து, தப்பிப்போகிறவர்களைக் கண்டித்து, இவ்விதமாய்த் தன் ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். 1 தெச. 2 : 12.

4. தேவனோடு உடன் வேலைக்காரி.

1 கொரி. 3 : 9. நாம் தேவனுக்கு உடன் வேலைக்காரர். அவர் நம்முடனேகூட இருந்து கிரியை நடப்பிக்கிறார். மாற்கு. 16: 20. (a) சிறுபிள்ளைகள் பார்த்து பின்பற்றுவதற்கு நாம் அவர்களுக்கு மாதிரியாக இருக்கவேண்டும். இன்னின்ன பிரகாரமாக நடக்கவேண்டுமென்று சொல்வது போதாது. நாமே எல்லாவற்றிலும் நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காணப்படவேண்டும். தீத். 2: 7-8, 1 கொரி. 9 : 27, 1 தீமோ. 4 : 12 ; 5 : 22. சற்குருவாகிய இயேசுவும் தம்முடைய சீஷர் பரிசுத்தமாகும்படி தம்மைத்தாமே பரிசுத்தமாக்கினார். யோவா. 17 : 19. பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபையாரைப்பார்த்து 'என்னைப் பின்பற்றுங்கள்' என்கிறார். 1 கொரி. 4 : 16 ; 11 : 1. இவ்வளவு தைரியமாய் என்னைப் பின்பற்றுங்கள் என்று சொல்வதற்கு அவர் கிறிஸ்துவை எவ்வளவு நெருங்கிப் பின்பற்றி எவ்வளவு நேர்மையாய் நடந்திருக்கவேண்டுமென்று சற்று யோசித்துப்பாருங்கள். நாமும் நமது மாணாக்கரைப்

பார்த்து என்னைப் பின்பற்றுங்கள் என்று சொல்லத்தக்க குற்றமற்ற ஜீவியம் செய்ய முயலுவோமாக. பிலி. 3 : 17.

(b) இந்த ஊழியத்தில் உபாத்தினிக்கு இருக்கவேண்டிய நோக்கமென்ன? 1 தீமோ. 3 : 22; 1 தெச. 2 : 4-6. அழிந்துபோகிற ஆகாயத்திற்காகவாவது அல்லது மனிதர் புகழ்ச்சிக்காகவாவது அல்லது மேலதிகாரிகளைப் பிரியப்படுத்துவதற்காகவாவது பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கும் பயந்து பிள்ளைகள்மேல் அன்பு கூருவதினால் அவர்களுக்காக முழுப்பலத்தோடும் ஊக்கத்தோடும் உழைக்கவேண்டும். கலா. 1 : 10; ரோம. 15 : 1.

(c) வல்லமை. தேவனோடு உடன் வேலையாளாயிருக்கிற உபாத்தினி முழுவதுமாகத் தன் ஊழியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவளாயிருக்கவேண்டும். என்ன நஷ்டம் வந்தாலும் சரி, என்ன பாக்கிய சிலாக்கியங்களை இழக்க நேரிட்டாலும் சரி, பவுல் அப்போஸ்தலனைப்போல செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் 2 கொரி. 12 : 15. எப்படியாகிலும் சிலரை ஆதாயப்படுத்துவதற்காக எல்லாருக்கும் எல்லாமாகவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். 1 கொரி. 9: 22; பிலி. 2: 17.

II. பிள்ளைகளுக்காக உபாத்தினி எதிர்நோக்கும் லக்குகள்.

(Ideals for her Pupils.)

தேவனுடைய சாயல் அவர்களில் புதுப்பிக்கப்படவேண்டும். ஆதி. 1: 26; கலா. 4: 19. நமது சிறு பிள்ளைகளில் பாவத்தினால் மறைந்துபோன கிறிஸ்துவின் சாயல் திரும்பவும் உருவாக்கப்படும் வரைக்கும் வெகுவாய்ப் பிரயாசப்பட்டு கர்ப்பவேதனைப்படவேண்டும். ஒவ்வொரு பிள்ளையைக்குறித்தும் ஜெபம் செய்வது மிக்க அவசியம். 2 கொரி. 13: 9; கொலோ. 1: 28.

நாம் கையாடவேண்டிய முறைகள்.

1. இயேசுவோடு அனுதினமும் சம்பாஷித்து அவரோடு வாசம் பண்ணுவது.
2. ஜெபம்.
3. மாணாக்கர் ஒவ்வொருவரைப்பற்றியும் பூரண அறிவு.
4. பொறுமை.
5. நீதி, பட்சபாதமின்மை.
6. நமது மாணாக்கர் இனிவரும் பிரஜைகள் என்ற எண்ணம்,

7. பிள்ளைகளின்மேல் உறுதியான அன்பு.

8. அனுதாபம்.

9. ஊக்கமான வேலை.

III. தன்தேசத்திற்காக எதிர்நோக்கும் லக்குகள்

(Ideals for her Country.)

நமது தேசத்தாரெல்லாரும் கர்த்தரை அறிகிற நாள் சீக்கிரம் வரும்படி முயற்சி செய்வது நம் கடமை. செப். 2 : 11; 3 : 9. ஆப. 2 : 14 ; வெளி. 21 : 2. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல நம் தேசமும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிரம்பப்படும் நாள் வரவேண்டும்.

இப்போது நாம் சிந்தித்த பெரிய நோக்கங்களை நிறைவேற்ற தேவனுடைய வல்லமை நமக்கு இன்றியமையாத அவசியம். 2 கொரி. 2 : 16 ; 3 : 5. அவருடைய வல்லமையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. அவர் வல்லமை இருந்தால் நாம் எல்லாவற்றையும் செய்யக்கூடும். பிலிப். 4 : 13; ஏசா. 40 : 39; ஆகா. 2 : 4. அந்த வல்லமையை ஆதி அப்போஸ்தலருக்கு அளித்த தேவன் நமக்கும் கொடுத்து நமது ஊழியத்தைச் செய்ய நம்மை ஸ்திரப்படுத்துவாராக.

J. Solomon.

KINDNESS TO ANIMALS

ஜீவகாருண்யம்

சிறுவர்களுக்கு ஜீவகாருண்ய முண்டாகும்படி செய்வதற்கு, பக்ஷி மிருகாதிகளுடைய அறிவு, அன்பு, உபயோகம் முதலியவற்றை விளக்கும்படியான சிறு கதைகளை யெடுத்துப் படிக்கும்படி செய்யவேண்டும். மேலும், தீனிதின்று தண்ணீர் குடித்து உயிர்வாழும் ஜீவன்களெல்லாம் தம்முடம்பி லுண்டாகும் உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் வருத்தப்படுமென்பதையும், அப்படி அவை வருந்தும்படி அவற்றிற்குக் கொடுமைசெய்வது கொடிய பாவமென்பதையும், அந்தப்பாவஞ் செய்யாதபடி விலக்கப் பல வழிகளுண்டென்பதையும், அவர்களுடைய மனத்தில் நன்றாய்ப் பதியச்செய்யவேண்டும். பல சிறுவர்கள் நாய், பூனை, தவளை, பறவை முதலிய எளிய ஜெந்துக்களைப் பிடித்து ஹிம்சிப்பதாகப்

பலவாறு கேள்வியுற்றிருக்கிறோம். அப்படி அவைகளை ஹிம்சிக்காமல் அவைகளிடத்தில் அன்பு பாராட்டவேண்டுமென்றும், அற்பப் பிராணிகளைப் பரிவுடன் பாதுகாப்பது பெருந்தன்மையென்றும் அச்சிறுவர்களுக்குக் கற்பித்தால், இந்தக் கொடிய செய்கைகள் வெகுவாய்க் குறைந்துபோகுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால், பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இப்படிப்பட்ட ஜீவகாருண்யத்தைத் தம் பிள்ளைகளுக்குப் போதிக்கும்படி வேண்டுகிறோம். மனிதர்களுக்கு உடம்பில் ஏதேனும் ஒரு காயப்பட்டால் எப்படி சுறுக்கென்று உறைக்கிறதோ, அப்படியே வாயில்லா ஜெந்துக்களுக்கும் உறைத்து நோவுண்டாகும். மேலும், மனிதரைப்பார்க்கிலும் மிருகங்களுக்கு அப்படி உபத்திரவப்படுத்துவதினாலுண்டாகும் நோவு இன்னுமதிகமாம். ஏனென்றால் அந்த நோவைப் பொறுத்துக்கொள்ளும்படியான மனவுறுதி அவைகளுக்கில்லையன்றோ? ஆகையால் அவைகள் விஷயத்தில் அதிகமான அன்புபாராட்டி ஆதரிக்கவேண்டும்.

CHILDREN'S PAGE

THE THREE BROTHERS

மூன்று சகோதரர்

ஓர் ஏழை மனிதனுக்கு மூன்று மக்கள் உண்டு. மூத்தவனுக்கு 'என்னால் முடியாது' என்றும், இரண்டாம் மகனுக்கு 'செய்ய மாட்டேன்' என்றும், மூன்றாம் மகனுக்குப் 'பிரயாசப்பட்டுப் பார்ப்பேன்' என்றும் பேர்.

என்னால் முடியாது என்னும் மூத்த மகன் சோம்பலும் கோழையுமாயிருந்தான். ஒரு சிறு அகழியைக் கண்டால் தான் அதில் விழுந்துவிடக்கூடும் எனப் பயந்து அதன்வழியாய்க் குதித்துப் போகப் பின்வாங்குவான். விழுந்து சாகநேரிடும் எனப் பயந்து ஒரு சிறு மரத்திலுங்கூட ஏறத் துணியான். யாதாம் ஓர் காரியத்தைச் செய்யக்கேட்டால் பிரயாசப்பட்டுப் பார்க்குமுன் தன்னால் முடியாது என்று சுலபத்தில் சொல்லிப்போடுவான். பாடசாலையிலும் பந்துக்களத்திலும் ஒன்றுபோலவே கோழைத்தனம் காட்டுவான். பாடத்தில் ஓர் வினாக்கேட்டால் தனக்குத் தெரியாது என்று சொல்லிப்போட்டு சும்மா இருந்துவிடுவான். ஓர் கணக்குப்போட்டால் தன்னால் இயலாது என்று சொல்லிப் பிரயாசப்படாமல் கவலையற்றிருப்பான்.

செய்யமாட்டேன் என்னும் இரண்டாம் பையன் சோம்பேறியல்ல, மந்தனுமல்ல; ஆயினும் முரட்டுத்தனப் பிடிவாதக்காரன். யாதாம் ஓர் காரியத்தைச் செய்வதில்லை என்று அவன் சொல்லிவிட்டால், அவன் மனசை மாற்ற யாராலும் முடியாது. அவன் கோபதாபங்கொண்டால், உபாத்தியாயர் எவ்வளவாய் நெருக்கி ஏவினுலும் அவன் விளையாட்டுக் களத்துக்குத் தானும் போகான். பாடம் சரியாய் ஒப்புவியாவிடில் சிட்சை கிடைக்கும் என்று அறிந்திருந்தாலும், அவன் விளையாடத் துவக்கிவிட்டால் யார் தடுத்தாலும் அடங்கான். அவன் தன்னிஷ்டக்காரனும் முரட்டுக்குணமும் உடையவனுய் விளங்கியதால் ஒருவருக்கும் அவன்மேல் பிரியமில்லை. அவன் தன்னிஷ்டப்படியே விளையாடியதால் பந்துக்களத்திலும் சாமர்த்தியனுய் விளங்கவில்லை. அவனுக்குக் கற்பிக்கப்பட்டபடி செய்யாததால் படிப்பிலும் புரோகதி பெறவில்லை.

பிரயாசப்பட்டுப் பார்ப்பேன் என்னும் பையன் மூவரில் இளையவன். அவன் சிறுவனுயிருந்தும் தைரிய நெஞ்சுடையோன். பெற்ருரோ உபாத்தியாயரோ எதைச் செய்யச்சொன்னுலும் அதைச் செய்ய முயற்சிப்பான். கடினமான எந்தக் காரியத்தையாவது செய்ய அவனைக்கேட்டால் யாதொரு மனக்கோட்டமுமின்றி பிரயாசப்பட்டுப் பார்க்கலாம் என்பான். வேளாவேளைகளில் அவன் செய்து முடிக்கத் தவறினுலும், அவன் துணிந்து துவக்கிய கருமத்தில் மொத்தத்துக்கு சித்தியும் ஜெயமும் பெற்ருன். ஒருதருணம் ஒரு சிறு நீரோடையைக் குதித்துச் சாடிக் கடக்க எத்தனித்ததில் அவன் தவறிவிழுந்தும் அழவில்லை. அவன் சற்றுப் பிராயந்தாண்டிப் பின்னும் குதித்துப் பார்க்கலாம் என்று தீர்மானித்து அவ்வாறு செய்து ஓடையைத் தாண்டிவிட்டான். பிரயாசப்பட்டுப் பார்ப்பேன் என்னும் இளையபையன் முதல் முதல் பாடசாலையில் பிரவேசித்தபோது உபாத்தியாயர் அவனைப்பார்த்து வாசிக்கத்தெரியுமா என்று கேட்டார். அதற்கவன் தெரியாது, ஆயினும் பிரயாசப்பட்டுச் சீக்கிரத்தில் வாசிக்கப் படிப்பேன் என்ருன். ஆசிரியர் சந்தோஷப்பட்டு அத்தகைய மாணுக்கர்பேரில் தமக்கு வெகு பிரியம் என்ருர். சில மாசங்களுக்குள் அப்பையன் வகுப்பில் முதல் இடத்தை அடைந்தான். என்னுல் முடியாது என்ற பையன் வகுப்பில் மற்றவனுக்குப் பிந்தினுன். செய்யமாட்டேன் என்னும் இரண்டாம் பையனே வகுப்பில் கடைசி இடத்தை மற்றெருவருக்கும் விட்டுக்கொடுக்கவில்லை.

தற்காலம் அம்மூவரும் வளர்ந்து பிராயபக்குவமாயிருக்கிருர்கள். என்னுல் முடியாது என்னும் மூத்தமகன் ஓர் வேலைக்காரனுயிருக்

கிருன். அவனுடைய எஜமான் பேர் உன்னுல் இயன்றதைச் செய் என்பது. இரண்டாம் மகன் ஓர் போர்வீரன். அவனுடைய தளகர்த்தனின் நாமதேயம் செய்யத்தான் வேண்டும் என்பது. பிரயாசப்பட்டுப் பார்ப்பேன் என்னும் இளையமகனே காரியசித்தி என்னும் கம்பெனி முதலாளியாயிருக்கிருன்.

TURN TO THE LEFT

(Rev. Jacob Chamberlain, D.D.)

இடது பக்கமாய்த் திரும்பு

சாம்பர்லேயின் பண்டிதர் எழுதுகிறதாவது :—

‘ நான் ஒரு செப்டெம்பர் மாதத்தில் ஐதராபாத்திலும் மத்திய இந்தியாவிலும் சுற்று யாத்திரை போய் பிரசங்கித்து சுவிசேஷப் பிரதிகளைக் கொடுத்துக்கொண்டு திரிந்தேன். அது உத்தேசம் 1,200 மைல் குதிரைமேல் ஏறிச் செல்லவேண்டிய நெடும் பிரயாணம். கிட்டத்தட்ட ஐந்து மாசங்களாய் அப்படித் திரிந்தோம். அப்படித் திரிகையில் ஒரு நாள் எங்களுக்கு நன்ருய்த் தெரியாததும் யாத்திரை பண்ண இடைஞ்சலானதுமான ஒரு காட்டுப் பிரதேசத்தில் வந்து அகப்பட்டுக்கொண்டோம். ஆபத்து உண்டாகிப்போமோ என்று என்னேடுகூட வந்தவர்கள் பயப்பட்டார்கள். எனக்கோ நான் அப்பிரயாணத்தைத் துவக்குமுன் ஜெபத்தில் நின்றபோது “இதோ சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” என்ற வாக்குத்தத்தம் கிடைத்திருந்தது. ஆகையால் என் உள்ளம் தடுமாறவில்லை. என்னேடு கூட [illegible] சுதேசிகளும், இரண்டு வண்டிகள் நிறைய வேதாகமப் பிரதிகளும் மற்றும் சாமான்களும் இருந்தன. இரண்டரை மாதம் பிரயாணம் பண்ணினபின் நாங்கள் நேரே போகவேண்டிய வழியை விட்டு கோதாவரி நதியின் பெருக்கினிமித்தம் விலகிப்போகவேண்டியதாக நேரிட்டது. நாங்கள் காட்டினூடே செல்கையில் துஷ்ட மிருகங்களைப் பிடிக்கும்படி வைத்திருந்த தங்கள் பொறிகளைப் போய் பார்த்துவிட்டு மாலை மயங்குமுன் தங்கள் ஊர் போய் சேரும்படி விரைவாய்த் திரும்பி ஓடுகிற இரண்டு வேட்டைக்காரரைக் கண்டோம். அவர்கள் எங்களைக் கண்டமாத்திரத்தில் : ‘கோதாவரி நதியானது இதற்கு முன் ஒருபோதும் இல்லாதவிதமாய் பெருக்கெடுத்துப் பாய்கிறது. அதன்

க்கரைக் காடுகளிலுள்ள துஷ்ட மிருகங்களும் மிரண்டு திரிகின்றன என்றார்கள். என் வழிகாட்டிகளுக்கு பாதை நன்றாய்த் தெரியுமாயினும் கோதாவரி நதி கரைபுரண்டோடுவதால் கலக்கமுற்றனர். நேரம் இருட்டுமுன் கூடாரம் அடிக்கத்தக்க வசதியான ஓர் இடத்தைக் கண்டுபிடிக்கவேண்டும என்று பார்த்தார்கள். வர வர எங்கும் வெள்ளப்பிரதேசமாய்க் காணப்பட்டதால் பின்னிட்டுத் திரும்ப வேண்டியதாயிற்று. அவ்விதம் திரும்பினும் ஓர் ஊர்போய்ச் சேர நேரம் போதாது. என்னோடு வந்த அந்த நாலு சுதேச பிரசங்கிகளும் சற்று வருத்தப்படத் துடங்கினர். ஒரு மணி நேரத்துக்குள்ளாக பொழுதும் போயிற்று. பிரம்புக் காடுகளுக்குள் அலைந்து திரிகிற பயங்கரமான கடுவாயின் குமுறல்கள் என் காதுகளில் எட்டின. நான் என் கூட வந்தவர்களோடு யாதொன்றும் பேசாமல் தேவனோடு மாத்திரம் பேசினேன். சகதியான அக்காட்டின் வழியாய் என் குதிரை செல்கையில் என் இருதயம் தேவனுக்கு நேரே எழும்பி: என் பரம எஜமானே உமது நிமித்தம் அல்லவோ நாங்கள் இங்கே வந்தோம். இந்தப் பிரயாணத்திற்கென்று நாங்கள் புறப்படுமுன் உம்மோடு நாங்கள் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவில்லையோ? வழி முழுவதும் உம்முடைய பரிசுத்த நாமத்தை நாங்கள் உண்மையாய் பிரசங்கிக்கவில்லையோ? தொந்தரவுக்குப் பயந்து உமது ஜோலியை விட்டு சறுகினோமோ? உமது ராஜ்யத்துக்கு விரோதியைக் கண்டு பின்னிட்டோமோ? நான் உங்களோடு கூட இருப்பேனென்று தேவரீர் எங்களுக்கு வாக்குத்தரவில்லையோ? இப்பொழுது எங்களுக்கு தேவரீர் அவசியம். இவ்விரவில் பெரும் ஆபத்திற்குள் அகப்பட்டுக்கொண்டோம். இப்பெரும் வெள்ளத்தினின்றும், கொடிய கடுவாய்களினின்றும், இடம் வலம் தெரியாத இக்காட்டினின்றும் தேவரீர் தாமே வந்து எங்களை இரட்சிக்கவேண்டும். தேவரீர் ...ரும். வந்து நாங்கள் செய்யவேண்டிய தென்னவென்று எங்களுக்குக் காண்பியும் என்று கருத்தாய் வேண்டிக் கொண்டேன்.

மற்றவர்கள் கேட்கக்கூடாதபடி என் காதுகளில் மாத்திரம் எனக்கு ஒரு சத்தம் விழுந்தது. ' இடது பக்கமாய்த் திரும்பு, நேரே கோதாவரிக்குப் போ, அங்கே உனக்கு முசிப்பாறுதல் உண்டு' என்பதே அந்தச் சத்தம். அதைக் கேட்டவுடன் நான் என் குதிரையைச் சற்று விரைவாய்த் தட்டி என் வழிகாட்டிகளை அழைத்து கோதாவரி இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சரியாய் இன்னும் ஒரு மைல் இருக்கும் என்றார்கள். நான் அதன் கரையோரங்களில் ஏதாவது ஊர் இராதா

என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இல்லை இல்லை, அதன் கரையோரமெல்லாம் இப்பொழுது வெள்ளக்காடாகத்தான் இருக்கும். அநேக மைல்களுக்கு அப்பால் சென்ருல் மாத்திரம் சில வீடுகளைக் காணலாம் என்ருர்கள். நான் இந்த வெள்ளத்துக்குத் தப்பி இரவு மட்டுக்கும் நமது கூடாரங்களை அடிக்க எதாவது ஒரு திடலோ அல்லது ஒரு மேடோ கிடையாதோ என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இல்லை ஐயா, எல்லாம் இப்படியே தாழ்ந்த தட்டையான பூமியாகத்தான் இருக்கும் என்ருர்கள். நான் என் குதிரையை ஒரு பக்கமாய் ஒதுக்கிக் கொண்டுபோய்த் திரும்பவும் ஜெபித்தேன். பின்னும என் காதுகளில் முந்தின சத்தமே விழுந்தது. அப்பொழுது நான் என் வழிகாட்டிகளை அழைத்து நமது கூடாரங்களை அடிக்க ஒரு உயரமான பூமி கிடையாதா அல்லது ஒரு வள்ளம் கிடையாதா என்று திரும்பவும் கேட்டேன். அதற்கு அவர்கள் இன்னும் ஆறு மணி நேரமாக நாம் நடந்து இக்காட்டின் மறு தொங்கலுக்குப் போய்ச் சேருவோமாஞல் ஒருவேளை எதாவது ஒதுக்குக் கிடைக்கும். இன்னும் அரைமணி நேரத்திற்குள் பொழுது போய்விடும், இரவுக்கு நாம் என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். அதற்கு நான் தேவன் அறிவார் என்றேன்.

நான் பின்னும் ஒரு பக்கம் போய் முன்னைவிட அதிக ஊக்கமாய் ஜெபித்தேன். அப்போது முன்னைவிட அதிக பலமாயும் தெளிவாயும் ‘நீ இடது பக்கமாய்த் திரும்பி கோதாவரிக்குப் போ, அங்கே நீ முசிப்பாறும் இடத்தைக் காண்பாய்’ என்ற சத்தம் என் காதுகளில் விழுந்தது. என்னேடு வந்தவர்கள் அதைக் கேட்கவில்லை. அது என்னது என்று விபரிக்க எனக்குத் தெரியவுமில்லை. ஆனல் என் காதுகளில் தெளிவாய் ஒரு ஆள் அவ்வார்த்தைகளைப் போட்டார். அப்பொழுது நான் என் ஜெபத்திற்கு தேவன் தந்த விடை. நான் இதை சமுசயிக்கக் கூடாது. உடன்தானே இதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்று மனதில் சொல்லிக்கொண்டு என் வழிகாட்டிகளைத் துரிதமாய் அழைத்து: நில்லுங்கள், நேரே இடது பக்கமாய்த் திரும்புங்கள் ; கூடியவரையிலும் குறுக்கான வழியாய் என்னைக் கோதாவரிக்குக் கொண்டுபோங்கள், துரிதம் என்றேன். அவர்களோ அது இதைவிட மகா கஷ்டமும் தொந்தரவும் துன்பமுமாய் இருக்குமென்ருர்கள். நானே ‘நீங்கள் எனக்குக் கீழ்ப்படியவேண்டும் ; என் வார்த்தையின்படி கீழ்ப்படிய ஆயத்தமில்லையா? சூரியன் அஸ்தமிக்கும் முன் இடதுகைப் பக்கமாய் திரும்பி கோதாவரிக்குப் போங்கள் என்றேன். என்னேடிருந்த சுதேச பிரசங்கிகள் பிரமிப்போடு என் முகத்தை உற்றுப்பார்த்தார்கள்.

நான் அவர்களைப் பார்த்து, 'நதியில் நமக்கு ஒதுக்கிடம் இருக்கிறது' என்று மாத்திரம் சொன்னேன். வேறென்ன சொல்ல முடியும்? என் கூலிக்காரரில் ஒருவன் நதியில் ஏதோ ஒரு உதவி அவருக்குக் கிடைக்குமென்று யாரோ சொல்லியிருக்கிறார்கள். அதுதான் அப் படிச் சொல்லுகிறார் என்று இன்னொருவனோடு பேசுகிறதை நான் கேட்டேன். ஆம், ஏதோ உதவி கிடைக்குமென்று கேட்டேன். அது என்ன மாதிரி என்று எனக்குத் தெரியாது. என்றாலும் அதைப் பற்றிய கவலையும் என்னை விட்டுப் பறந்துபோயிற்று. எப்போ அந்த இடத்தில் போய்ச் சேருவோம் என்ற எண்ணம் மாத்திரம் உண்டாயிற்று. நாங்கள் அந்த இடத்திற்கு பறந்து போய்ச் சேர்ந்ததுபோல் போய்ச் சேர்ந்தோம். என் கால் போய் எட்டின அந்த நதிக்கரையிலேயே ஒரு விஸ்தாரமான தட்டைப் படகை ஒரு மரத்தில் கட்டி வைத்திருக்கக் கண்டேன். வெள்ளம் உயரு கிறபோது அது உயருகிறதும் வெள்ளம் தாழுகிறபோது அது தாழுகிறதுமாக இருந்தது. சங்கதி என்னவென்று நான் சுற்று முற்றும் திரும்புகையில் இரண்டு மனுஷர் மரத்தினின்று கீழே இறங்கினார்கள். நான் அவர்களிடத்தில் காரியம் என்னவென்று விசாரிக்கையில் அவர்கள் இது பிரிட்டிஷ் இந்தியா ராஜாங்கத் தைச் சேர்ந்த படகு. இந்த நதி பெருக்கெடுக்கையில் இந்தப் படகில் மனுஷர்கள் வண்டிகள் சாமான்கள் முதலியவற்றை சுற்றி அக்கரைப்படுத்தும்படி அநேக மைல்களுக்கு அப்பாலிருக்கிற ராஜ பாதைக்குச் சமீபமாய் நாங்கள் நிறுத்திக்கொண்டிருப்போம். சற்று நேரத்திற்கு முன் பிரமாதமான வெள்ளப்பெருக்கமொன்று வந்த தால் நாங்கள் கூடியவரையில் இந்த வெள்ளத்தை நிறுத்தப்பார்த்தும் முடியாமல்போயிற்று. கடைசியாய் மகா வருத்தத்துடன் வந்து இந் தக் கயிற்றை இந்த மரத்தில் எறிந்ததால் வெள்ளம் சற்று நிற்கவே, இரவு மட்டுக்கும் இங்கேயே இருக்கத் தீர்மானித்து இந்த மரத் தில் ஏறினோம் என்றார்கள்.

அப்பொழுது நான் நல்லது சிநேகிதர்களே, இது ராஜாங்கத்து வெள்ளமானதால் இந்தப் பிரயாணத்தில் நான் அதை உபயோகிக்க அதிகாரமுண்டு. நீங்கள் எனக்கு நன்றாய் உதவிசெய்யுங்கள். நான் உங்களுக்கு நல்ல சம்பளம் தருவேன் என்றேன். அப்படியே நாங் கள் அந்தப் படவில் ஏறிக்கொண்டு எங்கள் சாமான்களை ஏற்றி நாங்கள் நாடித்தேடிய இடம் போய்ச் சேர்ந்தோம்.

அந்தப் படகை தான் நிற்கவேண்டிய விடத்தைவிட்டு மாற்றி அந்தத் தண்டு வலிக்கிறவர்களின் கைக்கு அடங்காமல் ஆக்கி நான் வந்து சேர்ந்த இடத்தில் கொண்டுவந்தது யார்? இப்படிப்பட்ட

ஆபத்து எங்களுக்கு நேரிடுமென்று முன்கூட்டியே அதை ஆயத்தமாக்கினவர் யார்; நான் உன்னுடனே கூட இருக்கிறேன் என்று திருவாக்களித்தவரும் ஜெபத்தைக் கேட்கிறவருமாகிய நமது கர்த்தரல்லவா?

'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.'

HOW TO LIVE IN PEACE

சமாதான ஜீவியத்துக்கான வழி

1. உன் அலுவலைப் பார்.

2. தீய நாவுக்கு உன்னை விலக்கிக் காத்துக்கொள். அவதூறுக்குப் பதில் அவதூறு பேசுவது தீமைக்குத் தீமை செய்வதாம்.

3. அவகாச உரிமை சம்பந்தமாயோ, அபிப்பிராயபேத சம்பந்தமாயோ சொற்பக்காரியங்களுக்காகப் போராடாதே.

4. மற்றவர்கள் உனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறினாலும், நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதைச் சரியாய்ச் செய்து நிறைவேற்றுவாயாக.

5. உன் சத்துருவையும் நேசிக்கிறாய் என்று உன் கிரியையினால் அவன் காணத்தக்கதாக நடந்துகொள்.

6. தாழ்மையை அணிந்துகொள்.

DEBORAL, THE PATRIOT

தேசாபிமானியான தெபோராள் என்னும் ஸ்திரீ

யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு ஜனங்களின் நிலைமை மிகவும் வருத்தமானதாயிற்று. தேசம் முழுவதும் ஜெயிக்கப்படவில்லை, கடற்கரையிலுள்ள மிகவும் செழிப்பான பாகங்கள் பல இன்னும் பெலிஸ்தர் கையிலிருந்ததுமன்றி மதில் சூழ்ந்ததும் மலைச்

சிகரங்களில் கட்டப்பட்டதுமான பல நகரங்கள் கானானியர் கையி லிருந்தன. இஸ்ரவேலரும் ஐக்கியமற்றவர்களாய் இருந்தார்கள். ஒவ்வொரு கோத்திரமும் தன்னைச் சுயாதீனமுள்ளதாகப் பாவித்தது. அவர்கள் தேசம் இந்த எண்ணத்தைப் பலப்படுத்தும் தன்மையுள்ளது. ஏனெனில் அது ஒன்றோடொன்றை இசைக்கும் ரஸ்தாக்களில்லாத தும் மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ளதுமான தேசம். ஆகையால் இஸ்ரவேலர் தனித் தனிக் கும்புகளாகக் குடியிருக்க நேர்ந்தது. சிலர் அதிக சுயநயமுள்ளவர்களாயும் சண்டைக்காரராயுமிருந்தார்கள். தேச சம்பந்தமாயோ மார்க்க சம்பந்தமாயோ ஒரு பொது அதிகாரியில்லை. ராஜாவுமில்லை, பொது ஆராதனை ஸ்தலமுமில்லை. எல்லாம் குழப் பம். யெகோவாவை வணங்குவது ஜனசமுதாய வழக்கம் என்று பலர் எண்ணினார்கள். ஆனால் அதிகமானபேர் அந்நிய தேவர்களை யுங்கூட வணங்கினார்கள். இஸ்ரவேலர் இப்போது கிருஷிக்காரரா யிருந்தார்கள். ஆகையால் நல்ல விளைச்சல் கிடைக்கும்படி தேசத் தின் செழிப்பை ஆளும் தேவர்களையும், பெயாலீம் அல்லது ஆண்ட வர் என்னப்பட்ட ஸ்தலத்து தேவர்களையும் வணங்கினார்கள். இவ் விதமாக இஸ்ரவேலர் படிப்படியாய் பக்தியற்றவர்களும் சகோதர சிநேகமற்றவர்களுமானார்கள். இப்படியிருக்க பல் தடவைகளிலும் ஓரோர் கோத்திரத்திலிருந்து ஒருவன் பெலத்திற்கோ, தைரியத் திற்கோ, ஞானத்திற்கோ பேர்போனவனாய் எழும்பி அவன் தலைமை யின் கீழ் இஸ்ரவேலர் சிலகாலம் அந்நிய நுகத்தடியை நீக்கிப் போடக்கூடியதா யிருந்தது. அவ்வித தலைவர் நீங்கிப்போனபோது ஜனங்கள் மறுபடியும் பாவத்திற்குள்ளும் குழப்பத்திற்குள்ளும் விழுந் தார்கள். சில சமயங்களில் ஜனங்கள் தங்கள் பாவத்தினாலேயே மற்றவர்களுக்கு அடிமைகளானதை உணர்ந்து மனந்திரும்பி ஜெபித்த போதுதான் நியாயாதிபதிகள் என்ற தலைவர் எழும்பினது. இவ்வித மாக அனுபவத்தினால் தேவனுக்குப் பயப்படுதல் ஜாதிகளின் பெலன், தேவனை எதிர்த்தல், ஜாதிகளின் பெலவீனம் என்ற பாடத்தை இஸ்ர வேலர் கற்றுக்கொண்டார்கள்.

தெபோராள் இஸ்ரவேலரெல்லாரிலும் மிகவும் பேர்பெற்ற ஸ்திரீ யாயிருந்தாள். இப்படி அவள் பேர் படைத்தது யெகோவாவிட மிருந்து அவள் ஞானத்தைப் பெற்றுக்கொண்டதினாலேயே, அதி னால் அவள் தீர்க்கதரிசி என்னப்படுகிறாள். அதற்குப் பொருள் தேவனுடைய ஞானத்தைப் போதிக்கிறவள் என்பது. அவள் ஒரு நியாயாதிபதியாகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தாள். அக்காலத்தில் கோர்ட்டு கச்சேரிகளில்லை. ஆனால் யாருக்காவது விசேஷித்த ஞானமிருக்கிறது என்று கேள்வியானால் தங்கள் வருத்தங்களைத் தீர்த்

துக்கொள்ள ஜனங்கள் அங்கே போவார்கள். தன் கூடாரத்தை அல்லது குடிசையை ஒரு பேரீச்ச மரத்தோட்டத்தில் போட்டிருந்த தெபோராள் பேர்பெற்றவளானாள். அவள் வல்லமையின் இரகசியம் அவளிலிருந்த தேவ பயமும் ஞானமும் என்பதை மறவாதிருப்போமாக.

தேவனுடைய தீவெட்டியில் கொளுத்தின ஒரு பந்தம்போல தெபோராளிருந்தாள். அவள் தன் வெளிச்சத்தை மற்றவர்களுக்குக் கொடுத்தாள். மற்றவர்களைப் பெரிய காரியங்களைச் செய்ய எவி எழுப்பிவிடுவது பெரிய காரியம். இது ஒரு நல்ல ஸ்திரீயின் முக்கிய வேலை. உலகத்தில் தேவனுக்கென்று பெரிய வேலைகளைச் செய்த மனுஷரைப் பார்த்து நீங்கள் இப்படிச் செய்யத் தகுதியானதெப்படியென்று கேட்டால், அவர்கள் தங்கள் நல்ல தாய் அல்லது நல்ல (சகோதரி) அல்லது நல்ல மனைவியின் உற்சாகத்தால் அப்படிச் செய்யக்கூடியதா யிருந்ததென்பார்கள். இவ்விதமாகவே வடக்கே வாசம்பண்ணின பாராக் என்பவனைத் தெபோராள் போய்க் கூப்பிட்டாள். அவன் ஒரு நல்ல சேவகனென்றும், சற்று உள் தைரியங் குறைந்தவனென்றும் அவளைப்பற்றி அவளுக்குத் தெரியும். அந்தத் தைரியத்தையும் நம்பிக்கையையும் அவள் அவனுக்குள் உண்டுபண்ணினாள். இந்த நம்பிக்கைக் குறைவுக்காக அவள் அவனைச் சற்று அற்பமாய் எண்ணினாள்; ஆனால் அவள் அவனைக் கைவிடவில்லை. இந்த நம்பிக்கையில்லாததினிமித்தம் ஜெயத்தின் மேன்மை முற்றிலும் அவனுக்குக் கிடையாது; அது ஒரு ஸ்திரீக்குக் கொடுக்கப்படும் என்றாள். அது தெபோராளல்ல, யாகேல்.

இவ்விதமாக சரீர பெலவீனமுள்ளவளும் ஆவியில் பலமுள்ளவளுமானவள் பெலவீன பாராக்கை பெலமுள்ளவனாக்கினாள். தெபோராளின் தைரியமும் பாராக்கின் உண்மையும் கூடி தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கவர்ந்துகொண்டு ஜெயமுண்டாக்கின.

நாமும் இந்த இஸ்ரவேலரைப்போலவே இருக்கிறோம். நாம் முற்றிலும் நல்லவர்கள் மத்தியிலே வாசம்பண்ணுகிறதில்லை. நமது சுத்தாங்கத்திற்கும் ஆவிக்குரிய ஜீவியத்துக்கும் சத்துருக்கள் நம்மைச் சூழ இருக்கிறார்கள். அவர்கள் நமது ஜீவியத்தின் நடுக்கோட்டையாகிய இருதயத்திலேயே இருக்கிறார்கள். தீமையை வெளியாக்குவதற்கு நாம் ஓயாமல் யுத்தஞ் செய்யவேண்டியதாயிருக்கிறது. இந்தச் சரித்திரத்திலிருந்து நாம் படிக்கவேண்டியவைகள்: முதலாவது, நாம் தேவனை மறக்கும்போது சத்துரு முன் செல்லுகிறான் என்பது. இரண்டாது, தேவனுடைய ஞானத்தையும் பெலத்தையும் தேடிப் பெற்றுக்கொண்டால் ஒருவனும் பெலவீனனல்ல. மூன்றாவது,

நமது எல்லா சத்துருக்களையும்விட தேவன் பெரியவர். நான்காவது, கிறிஸ்தவ ஜீவியம் ஓயாத யுத்தம் நிறைந்தது. அது சிலவேளைகளில் சோர்புக்கிடமாயிருந்தாலும் பெரிய ஜெயங்களினால் அது லேசாகவும் மகிமையாகவும் ஆக்கப்படுகிறது. 5–ம் அதிகாரத்தில் தெபோராளின் பாட்டைப் பார்க்க.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் மே மீ

1 வி.	1நாளா	15. 25—29	11 ஞா	1நாளா	29. 1— 9	22 வி.	பிர.	2. 1—13
		16. 1— 6	12 தி.	"	29. 10—19	23 வெ.	"	5. 1—12
2 வெ.	"	16. 17—25	13 செ.	"	29. 20—31	24 ச.	"	7. 1—14
3 ச.	"	16. 26—43	14 பு	யாக்.	1. 1—15	25 ஞா.	"	8. 1—13
4 ஞா.	"	17. 1—15	15 வி.	"	1. 16—27	26 தி.	"	9. 10—18
5 தி.	"	17. 16—27	16 வெ	"	2. 1—13	27 செ	"	11. 9 10;
6 செ.	"	21. 1—14	17 ச.	"	2. 14—26			12. 1— 7
7 பு.	"	21. 15—30	18 ஞா	"	3. 1—18	28 பு.	"	12. 8—14
8 வி.	"	22. 1—16	19 தி	"	4. 1—17	29 வி.	அப்.	1. 1—14
9 வெ.	"	28. 1—10	20 செ.	"	5. 1—20	30 வெ.	"	1. 15—26
10 ச.	"	28. 11—21	21 பு.	பிர.	1. 1—18	31 ச.	"	2. 1—13

C. L. S. PRESS, MADRAS—1919